**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**
**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புதுமைப்பித்தனின் இயற்பெயர் யாது?
2. தமிழில் சிறுகதை முன்னோடிகளாகக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
3. விந்தன் தாமே சொந்தமாக நடத்திய இதழின் பெயர் என்ன?
4. மாட்டுத் தொழுவம் கதையின் கரு யாது?
5. திருமலை நாயக்க மன்னரைப் பற்றி எழுதப்பட்ட வரலாற்றுச் சிறுகதை எது?
6. இல்லாதவர்கள் உழைப்பைச் சுரண்டும் அவலம் எந்த சிறுகதையில் பேசப்படுகிறது?
7. அம்பையின் இயற்பெயர் என்ன?
8. சமையலறையில் பெண்கள் உழைப்புச் சுரண்டப்படுதல் குறித்த சிறுகதை யாது?
9. தமிழில் சரித்திர நாவலின் தந்தை எனப்படுபவர் யார்?
10. தமிழ் நாட்டின் ஜேன் ஆஸ்டின் என்று போற்றப்படுபவர் யார்?.
11. வேங்கையின் மைந்தன் நாவலின் ஆசிரியர் யார்?
12. சுந்தர முதலியாரின் மகள் யார்?
13. தீப்பெட்டித் தொழிலில் ஈடுபடும் சிறுமிகளைப் பற்றி எந்த நாவல் குறிப்பிடுகிறது?
14. பொன்னீலனின் தாயார் எழுதிய நாவலின் பெயர் என்ன?
15. அறிவியல் ஆட்சியில் எந்த எந்த விளையாட்டுகள் தடை செய்யப்பட்டன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. ஸ்டீவன்சன் கூறும் மூவகைக் கதைகள் யாவை?
2. விந்தனின் வித்தியாசமான உவமை இரண்டைக் கூறுக.
3. 'கண்டாமணி' கதையின் சிறப்பு யாது?
4. தி.ஜா.வின் சிறுகதைகள் பற்றி இரா. தண்டாயுதம் குறிப்பிடுவது என்ன?
5. துப்பறியும் புதினங்கள் குறித்து எழுதுக.
6. கல்கியின் நகைச்சுவை நடை பற்றி எழுதுக.
7. ஆனந்தாயி நாவலின் கதை மாந்தர்கள் யாவர்?
8. புதிய மொட்டுகள் நாவலில் கல்வி நிலையத்தின் நிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அயல் நாடுகளில் சிறுகதை வளர்ச்சி குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) புதுமைப்பித்தனின் சமுதாயப் பார்வை குறித்துக் கட்டுரை தருக.

2. (அ) அண்ணாவின் வரலாற்றுச் சிறுகதைகள் குறித்து ஆராய்க.

   (அல்லது)

   (ஆ) புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

3. (அ) கோபல்லபுரத்து மக்கள் – புதினம் கூறும் வாழ்வியல் முறைகள் யாவை?

   (அல்லது)

   (ஆ) இராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் பெண் பாத்திரங்கள் குறித்து விளக்குக.

✱✱ ✱